<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

06.07.2010 முதல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய 27.05.2020 வரை பணத்தை திரும்ப பெற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் எந்த பணமும் கொடுக்காததால் தான் மேற்படி காலத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. திருப்போரூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து பிரதிவாதியை விசாரித்த பிறகு பிரதிவாதி எனக்கு ரூபாய் 2 லட்சம் வரைவோலையுடன் சேர்த்து ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். ஏற்கனவே அடமான ரசீது எழுதிக் கொடுத்திருந்தார் அதற்காக அந்த பணம் கொடுத்தார். அதற்கு தனி வழக்கு நடந்து முடிந்து விட்டது. பிரதிவாதி ரூபாய் 2 லட்சம் வரைவோலையுடன் சேர்த்து அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு வரை வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் பொறுத்து எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. 06.07.2010 வரை ரூபாய் 30 லட்சம் வரை பிரதிவாதிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ளேன். 2020ம் ஆண்டு வரையில் இடைப்பட்ட 10 ஆண்டு காலம் பணத்தை திருப்பி பெற நடவடிக்கை எடுக்காதது ஏன் என்றால் இடத்திலுள்ள பில்டிங்கை இடித்துவிட்டு காலி மனையை என்னிடம் ஒப்படைப்பதாக சொன்னதால் அதனை நம்பி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் போலியாக என்னால் தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களின் அடிப்படையில் நான் பிரதிவாதிக்கு எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி எழுதிக் கொடுத்த அடமான பத்திரத்தில் உள்ள கையெழுத்தை போல வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் கையெழுத்திட்டு போலியாக தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் சொத்தை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் நான் நிலம் வாங்குவது தொடர்பாக ஒப்பந்தம் ஏற்படுத்தியிருந்தால் 3 வருட காலத்திற்குள் ஏற்றதை ஆற்றுக பரிகாரம்

கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் அவர் மேல் இருந்த நம்பிக்கையின் காரணமாக நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

4. பிரதிவாதி என்னிடமிருந்து அடமானத்தின் மூலமாக ரூபாய் 2 லட்சம் தான் கடன் பெற்றிருந்தார் என்றும், 06.02.2008 மற்றும் 06.07.2010 ஆகிய தேதிகளில் எந்த பணமும் பெறவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ.2 ஆவணம் 06.07.2010 அன்று எழுதிக் கொடுக்கப்பட்டதாக சொல்லியுள்ளேன், அந்த ஆவணம் ஏற்படுத்தி 3 வருட காலத்திற்குள் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றால் நான் பணம் கேட்டு வழக்கை தாக்கல் செய்யவில்லை, சொத்தை எழுதிக் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பணம் கேட்டு வழக்கு தாக்கல் செய்வதாக இருந்தாலும் 3 வருடத்திற்குள் தாக்கல் செய்திருக்க வேண்டும், 10 வருடம் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பிரதிவாதியிடமிருந்து எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

5. வா.சா.ஆ.1 ஆவணம் 06.02.2008-ல் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் இருந்து 12 வருட காலத்திற்கு மேல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 2010ல் ரூபாய் 20 லட்சம் வாங்கியுள்ளார். எனவே உரிய காலத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 12 வருட காலத்திற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்ய வேண்டுமென்று நினைத்து வா.சா.ஆ.2 ஆவணத்தை போலியாக தயாரித்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் பிரதிவாதியால் எழுதிக் கொடுக்கப்படாததால் மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1-ன் அடிப்படையில் எந்தவித உரிமை மாற்றமும் பெறாததால் இந்த வழக்கை 12 வருடங்களுக்குள் தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு பொய்யான சங்கதிகளோடு போலியான ஆவணங்கள் மூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை